DAILY THANTHI

PAGE NO: 11 DATE: 29.09.2023

# பல்கலைக்கழகத்தில் சர்வதேச கருத்தரங்கு

## கவர்னர் தமிழிசை சவுந்தரராஜன் தொடங்கி வைத்தார்

காலாப்பட்டு, செப்.29-

புதுவை பல்கலைக்கழகத்தின் வரலாறு மற்றும் சமூக அறிவியல் துறை சார்பில் மதம், தத்துவம், இலக்கியம், வழிபாடு, கலை, வரலாறு குறித்த சர்வதேச கருத்தரங்கு பல்கலைக்கழக கலை மற்றும் கலாசார மையத்தில் 5 நாட்கள் நடக்கிறது. இதன் தொடக்க விழா நேற்று நடந்தது.

நிகழ்ச்சியில் கவர்னர் தமிழிசை சவுந்தரராஜன் கலந்து கொண்டு கருத்தரங்கை தொடங்கி வைத்தார். பல்கலைக்கழக துணைவேந்தர் குர்மீத்சிங், இந்திராகாந்தி தேசிய கலை மைய மண்டல இயக்குனர் கோபால், பேராசிரியர் சந்திரமவுலி உள்பட பலர் கலந்துகொண்டனர். இந்த கருத்தரங்கில் இந்தியா முழுவதிலும் இருந்து 60 பேர் கலந்து கொண்டுள்ளனர்.